P.R.NO: 49.

நாள்: 19.11.2017

# புத்திரிகை செய்தி

## உலக கழிவறை தினம் - 19.11.2017

திருநெல்வேலி மாவட்டத்தை நவம்பர் மாதத்திற்குள் திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற தூய்மையான மாவட்டமாக மாற்றிட மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதனோடு கூட தூய்மை மற்றும் கழிப்பறை பயன்பாட்டின் அவசியத்தை பொது மக்களுக்கு வலியுறுத்தும் நோக்கில் "உலக கழிவறை தினம்" – 19.11.2017 அன்று மாவட்டத்தில் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

அதன் தொடக்கமாக 17.11.2017 அன்று மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் மெட்ரிக் பள்ளிகளில், 50,000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளால் சுகாதார உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மேலும் 18.11.2017 அன்று பள்ளி மாணவ மாணவிகளுக்கான பள்ளிக்கூட கழிப்பறை சுவர் சித்திரம் வரையும் போட்டி அந்தந்த பள்ளிக்கூடங்களில் நடைப்பெற்றது. இந்த போட்டியில் 20க்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் கலந்துகொண்டுள்ளனர்.

உலக கழிவறை தினமான இன்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுதிறனாளிகள் நேய கழிப்பறை கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் தொடங்கிவைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட அனைத்து அரசு பணி மாற்று திறனாளிகள் நலச்சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். இதுமட்டுமின்றி அனைத்து அரசு அலுவலகங்களிலும் மாற்றுதிறனாளிகள் நேய கழிப்பறை கட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் தொடக்கமாக, அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் மாற்றுதிறனாளிகள் நேய கழிப்பறை கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம மக்களிடையே கழிப்பறை பயன்பாட்டின் அவசியத்தை எடுத்துக்கூறி சிறப்பான முறையில் பணியாற்றிய 20 ஊக்குனர்களுக்கு மாவட்ட ஆட்சியர் சிறப்பு பரிசளித்து பாராட்டினார்.

மேலும், மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இந்நிகழ்வானது சிறப்பான முறையில் ஊர் பொது மக்கள், சுய உதவி குழு உறுப்பினர்கள் பங்களிப்புடன் கொண்டாடப்பட்டது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.